# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் - 2018

8



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

**UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது**

**UCG RECOGNIZED JOURNAL**

**UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118**

மலர் : 6 | அக்டோபர்-2018 | இதழ் : 10



பதிப்பாசிரியர்

நல். நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549

02489 54308, 63817 01339



பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**



EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

ஆசிரியர் குழு

முனைவர் சி.தியாகராசன்
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

முனைவர் க.இரமேஷ்
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

முனைவர் போ.சத்தியமூர்த்தி
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

முனைவர் கி.சங்கரநாராயணன்
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

முனைவர் உ.அலிபாவா
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

முனைவர் சு.அரங்கநாதன்
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

# பொருளடக்கம்


1. புறநானூற்றில் வெளிப்படும் மனித வாழ்வியல் சிந்தனைகள்
*ஆ.சுந்தர் - 1

2. பள்ளு இலக்கியத்தில் வாழ்வியல்
*முனைவர் மீ.அஸ்வினி கிருத்திகா - 4

3. சிறுவர் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்
*முனைவர் செ.சாந்திகுமாரி - 8

4. நெய்தல நில மக்களின் தொழில் உறவுகளும் சமுதாய நிலையிருப்புக்களும்
*முனைவர் கோ.பாலமுருகன் - 11

5. தலித்திய கவிதைகளில் வாழ்வியல் சூழலும் தன்னம்பிக்கைச் சிந்தனையும்
*முனைவர் செ.ஷப்ரீன்முனீர் - 15

6. கலிங்கத்துப் பரணி காட்டும் காதலும் வீரமும்
*முனைவர் ப.பரமேஸ்வரி - 19

7. வள்ளுவர் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்
*முனைவர் கு.கௌரி - 22

8. இலக்கியங்கள் சுட்டும் வாழ்வியல் அறம்
*முனைவர் ஜெ.தேவி - 25

9. பதிற்றுப்பத்து கூறும் அரசியலறம்
*ப.ஜெயசெல்வி - 31

10. நாட்டுப்புற இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்
*முனைவர் கு.நாகராஜன் - 34

11. சங்ககாலப் பண்பாட்டில் ஆடைகள்
*கு.நீதா - 37

12. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் நெறிகள்
*முனைவர் பெ.ஆனந்தன் - 40

13. சிறுபஞ்சமூலமும் தமிழ்ச் சமுதாயமும்
*பெ.சத்யா - 43

14. கவிச்சக்கரவர்த்தி கம்பர் - வேதாத்திரி மகரிஷி-கொள்கை ஒப்பீடு
*முனைவர் ச.பொன்ஜெயந்தி - 46

# தலித்திய கவிதைகளில் வாழ்வியல் சூழலும் தன்னம்பிக்கைச் சிந்தனையும்

*முனைவர் செ.ஷப்ரீன்முனீர், தமிழ்த்துறைத்தலைவர், அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம், திருநெல்வேலி 627005

## முன்னுரை

தலித் மக்கள் தங்கள் வாழ்க்கையின் பொருட்டு எதிர்கொள்ளும் அவலங்களையும், மகிழ்ச்சியையும், ஆதிக்கச்சாதியினருடன் சில இடங்களில் முரண்பட்டு நிற்கும் நிகழ்வுகளையும் வெளிக்கொண்டு வருபவையாக தலித்திய கவிதைகள் விளங்குகின்றன. மேலும் எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் சாதிய ஒடுக்கு முறைகளிலிருந்தும் தலித் மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற கருத்தையும் இக்கவிதைகள் முன்வைக்கின்றன.

## தலித் பெண்ணிய தன்னம்பிக்கைக் கருத்துகள்

தலித் பெண்ணியத்தை மையமாகக் கொண்டு எழுத்தப்பட்ட கவிதைகள் தலித்பெண்கள் அடையும் இன்னல்களையும், போராட்டங்களையும், முதன்மைப்படுத்துகின்றன. ஆணாதிக்கச் சமுதாயத்தில் தலித் பெண்களின் அவலங்கள், அழுகுரல்கள் மட்டுமின்றி அவர்களின் கலகலப்பும், கலகமும் கொண்ட பண்பாடு, எதார்த்த வாழ்க்கையில் சிக்கிச் சின்னாபின்னப்பட்டுப் போய்விடாமல் எதிர் நீச்சல் போட்டு வாழும் துடிப்பு, பிரச்சினைகளால் அமுக்கப்படும்போது நகைச்சுவையும், நையாண்டித்தனமுங் கொண்டு பிரச்சினைகளை அமுக்கி விட்டு வாழும் தன்னம்பிக்கை, தன்மானம், வாழ்க்கையை உயிரோட்டத்துடன் உல்லாசத்துடன் வாழ வேண்டும் என்ற வேட்கையை உண்டாக்குகின்றன.

இந்த சமுதாயம் சேரியைப் பார்க்கும் பார்வை தாழ்ந்ததாக இருந்தாலும் சேரியில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்த பெண் தன் இருப்பிடத்தை உயர்வாகப் பார்க்கும் நிலை கீழ்க்காணும் சுகிர்தராணியின் கவிதையில் தென்படுகிறது.

**“மெல்லிய**
**புலால் நாற்றம் வீசுகின்ற**
**நானும்**
**தசைகளை முற்றாகப்**
**பியத்தெடுத்த எலும்புகள் தொங்கும்**
**என் வீடும்**
**கொட்டாங்குச்சியில் தோலைக்கட்டி**
**பறையொலி பழகும்**
**விடலைகள் நிறைந்த**
**என் தெருவும்**
**ஊரின் கடைசியில் இருப்பதாக**
**நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்**
**நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்**
**முதலில் இருப்பதாக”** **(சுகிர்தராணி, இரவு மிருகம், ப.32)**

தன் வீடு குறித்த வர்ணணையிலும் “தசைகளை முற்றாகப் பியத்தெடுத்த எலும்புகள் தொங்கும் என் வீடு” என்று கூறுவதன் மூலமும் கவிதாயினி தன் வீடு குறித்த எந்த அடையாளங்களையும் மறைக்க விரும்பவில்லை. வெளிப்படையாகத் தன் வீடும், தெருவும் குறித்து வெளிப்படுத்தும் சுகிர்தராணி, எல்லோரும் சேரி என்பது ஊருக்கு வெளிப்புறம் இருக்கும் என்று கூறும்போது தன் பார்வையில் முதலில் இருப்பதாகக் கூறுவதன் மூலம் தன் பார்வையில் தன் மக்களின் இருப்பிடம் குறித்துக் கொண்டுள்ள உயர்வான மதிப்பை

இக்கவிதை வெளிப்படுத்துகிறது. எதிர்மறையான மதிப்பை இக்கவிதை வெளிப்படுத்துகிறது. 'நீங்கள் எங்களை ஊருக்கு வெளிப்புறமாக வைத்துப் பார்க்கிறீர்கள். ஆனால் ஊரையே சுத்தமாக வைத்திருக்கும் நாங்கள்தான் முதலில் இருக்கிறோம்' என்று கூறும் சுகிர்தராணியின் இக்கவிதை புதிய பார்வையுடன் தன்னம்பிக்கையுடன் அமைந்துள்ளது.

புதிய மாதவியின் கவிதை ஒன்று வேறு அடையாளத்தை முன் வைக்கிறது. உங்களின் பார்வையில் கழிவுகள் எல்லாம் எங்கள் அடையாளமாக உள்ளன. என்கிறது அக்கவிதை.

**"எச்சில், மலம்**
**வியர்வை, நாற்றம்**
**சொறி, சிரங்கு**
**நகம், அழுக்கு**
**கண்ணீர், ரத்தம்**
**நமக்கானவை.**
**ஆனால்**
**உங்கள் அகராதியில்**
**எங்களுக்கான அடையாளங்கள்"** (புதிய மாதவி, புதிய கோடங்கி, ப.8)

கழிவுகள் எங்களின் அடையாளமாகவும், இரசனைக்குரியவை உங்களுக்குப் பொதுவானவையாகவும் உள்ளன. கழிவுகள் எல்லாம் உரமாகும். இனி கழிவுகளாய் இந்தச் சமுதாயத்தில் பார்க்கப்பட்ட நாங்கள் உரங்களாய் மாறி உயிர்கள் என்ற விதைகளை வளர்ப்போம். கழிவுகள் புதைக்கப்பட புதைக்கப்பட உரமாய் மாறும், ஒடுக்கப்பட ஒடுக்கப்பட நாங்களும் ஒருநாள் வீறு கொண்டு எழுவோம் என்று தன்னம்பிக்கையுடன் முடிக்கிறார்.

**"பொதுவான எல்லாம்**
**உயில் எழுதாத**
**உங்கள் உடைமைகள்**
**தீண்டாதக் கழிவுகளாய்**
**புதைக்கப்படுகின்றது.**
**எங்கள் வாழ்க்கை**
**உறங்காது உரங்கள்**
**புதைப்பட புதைப்பட**
**புறப்படும்**
**உயிர்களின் விதைகளாய்**
**கழிவுகளின் மடியில்"** (புதிய மாதவி, புதிய கோடங்கி, ப.8)

பெண்ணிய எதிர்வுக்குரல் வெளிப்படும் அதே நிலையில், தலித் பெண்ணிய தன்னம்பிக்கை குரல் புதிய நம்பிக்கையை தலித் பெண்கள் பெற்றிருப்பதை வெளிப்படுத்துகிறது.

**தலித்திய பெருமித உணர்வு**

தலித்திய படைப்புகள் என்றாலே அழுகை, சோகம், அழுக்கு என்ற பொதுவான எண்ணம் உருவாகி இருக்கிறது. ஆனால் தலித்திய படைப்புகள் தலித் மக்களின் உணர்வுகள் குறித்துப் பேசும் போது மகிழ்ச்சி, பெருமிதம் போன்ற உணர்வுகளையும் பேசுகின்றன. தலித் மக்கள் தாங்கள் தலித்தாகப் பிறந்து விட்டோமே என்று வருத்தப்படவில்லை, ஒதுக்கப்படுகிறோமே என்றுதான் வருதப்படுகிறார்கள். அதுவும் வருத்தப்பட்ட காலம் தாத்தா, அப்பா காலத்தோடு நிறைவு பெற்றுவிட்டது. தலித் மக்களின் இன்றைய தலைமுறையினர் பிரச்சனைகளை எதிர்கொள்ள துணிந்து விட்டனர். முன்பு சாதிப் பெயரையும், வீட்டின் இருப்பிடத்தையும் கூற வெட்கப்பட்டவர்கள் இப்போது வெட்கப்படுவதில்லை. தன் சாதி குறித்து, உழைப்பு குறித்து பெருமைப்படுகின்றனர். எடுத்துக்காட்டாகக் சுகிர்தாரணியின் கவிதையைக் கூறலாம். தன் இளவயதில் சாதி குறித்த இழிவு தனக்கு பல் அவமானங்களை தந்தது என்கிறார் சுகிர்தராணி.

**"செத்துப்போன மாட்டைத்**
**தோலுரிக்கும் போது**
**காகம் விரட்டுவேன்.**
**வெகுநேரம் நின்று வாங்கிய**
**ஊர்ச்சோற்றைத் தின்றுவிட்டு**
**சுடுசோறெனப் பெருமை பேசுவேன்.**

தப்பட்டை மாட்டிய அப்பா
தெருவில் எதிர்படும்போது
முகம் மறைத்து கடந்து விடுவேன்.
அப்பாவின் தொழிலும், ஆண்டு வருமானமும்
சொல்ல முடியாமல்
வாத்தியாரிடம் அடி வாங்குவேன்
தோழிகளற்ற
பின் வரிசையில் அமர்ந்து யாருக்கும்
தெரியாமல் அழுவேன்'' (சுகிர்தராணி, கைப்பற்றி என் கனவுகேள், ப.19)

ஆனால் தலித் குறித்த புரிதலை கவிதை பின்வருமாறு சுட்டுகிறது.

''இப்போது யாரேனும் கேட்க நேர்ந்தால்
பளிச்சென்று சொல்லி விடுகிறேன்
பறச்சி என்று'', சுகிர்தராணி, கைப்பற்றி என் கனவுகேள், ப.19

சாதி குறித்த இழிவு, பெருமிதமாக மாறுகிறது. இன்றைய தலித் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் இது.

அழகிய பெரியவனின் மற்றொரு கவிதை பெருமிதத்தை வேறு கோணத்தில் ஆய்கிறது. 'எங்கள், முப்பாட்டன், தாத்தன், அப்பன் போன்றவர்கள் பின்வாசல் வரையில அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் என் படிப்பு, வேலை என்னை உன் வரவேற்பறைவரை அனுமதித்திருக்கிறது. ஆனாலும் முழு மனதோடு என்னை ஏற்க நீ விரும்பவில்லை. ஆனாலும் நான் வருந்தவில்லை. இதை விட உயரமாக ராஜாளியின் மீதமர்ந்து பெருமிதமாக வாழ்வேன்' என்று தலித் மக்களின் தன்னம்பிக்கை குறித்துப் பேசுகிறது.

''தெருவோரம்
காத்திருப்பான் என் முப்பாட்டான்
பின் வாசலில் நின்று தாத்தனும் அப்பனும்
அழைத்த குரல் கேட்டிருப்பாய்
இன்று நான்
உன் வரவேற்பறை வரைக்கும்
அனுமதிக்கப்பட்டிருக்கிறேன்
போய் வருகிறேன்.
என்று படியிறங்கும்
என் சொற்களை நினைவில் கொள்
மீண்டும் உன்னை சந்திக்க வரும்போது
ராஜாளியின் மீதமர்ந்து
துண்டாடப்பட்ட உக்கிரத்திலிருக்கும்
என் வனத்தையும் கடலையும்
காற்றையும் நிலத்தையும் கூட்டி வருவேன்'',
அழகிய பெரியவன் (உனக்கும் எனக்குமான சொல், ப.128)

இவ்வாறு தங்கள் சாதி குறித்த இழிவு நிலை மாறி தலித் மக்களின் மனதில் புதிய மாற்றம் கொண்டு வந்திருப்பது வரவேற்புக்குரியது.

அபிமானியின் மற்றொரு கவிதை வேறு பார்வையை வெளிப்படுத்துகிறது. 'சேரி என்றால் இப்படித்தான் என நீ ஒரு பிம்பத்தை உருவாக்கி வைத்திருக்கிறாய் அதை உடைத்து எறிகிறோம் . எங்கள் நிமிர்தல் உனக்கும், உன் சாதிக்கும் ஏமாற்றம் தரும். பெருமிதமான எங்கள் வாழ்க்கை கண்டு ஓடி ஒளிந்து கொள்ளும் உன் கவுரவம், என்ற நம்பிக்கை விதையை விதைக்கிறது அக்கவிதை.

முதலில் சேரியில் ஏற்பட்ட மாற்றம் குறித்து பேசுகிறது கவிதை

''நேற்றுவரை தூர்ந்திருந்த
கூரைகள் தொங்கிய என் குடிசையின்
இன்றைய கான்கரீட் புனைவு கண்டு
பயனற்றுப் போகும்
உன் தீப்பந்தங்கள் .....
சேரியின் சாணித்தூள் தெரித்த
முற்றங்களில்
சிம்மாசனங்கள் எழுப்பிய உன்

சாதிப் பெருமைகள்
சிமெண்டு வெக்கையில் எரிந்து போகும்
இன்னும் சில நாட்களில்
வெள்ளையாய் உடுத்துவதிலும்
விமரிசையாய் நடப்பதிலும்
கடந்துப் போகவிருக்கும்
என் வாழ்க்கைப் பாதையில்
களவு செய்யப்பட்டதாய் நடுங்கும்
உன் கவுரவம்'' (அபிமானி, எதிராக ப.9)

தலித் மக்களின் உயர்வு குறித்த பெருமிதம் இக்கவிதையில் வெளிப்படுகிறது. ஆனால் இதை ஆதிக்கச் சாதியினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''நெடுஞ்சாண்கிடையில் என்கைகள் மடியும்
நிகழ்வுகள் காணாது
தாழும் உன் விழிகள்
சுற்றி வளைந்து என் சாதியை
உன் சாதிக்கிக் கீழ்மைப்படுத்தும் திமிருக்குத்
தீனி கிடைக்காது இனி என்னிடம்
முறைத்து விட்டுப் போவாள்
என் நிமிர்தல் கண்டு
உனக்கும் உன் சந்ததிக்கும்
வந்தனம் விதைக்கும் விரல்களை
இனி எனக்குள் தேடி
ஏமாந்தும் போகும் உன் கவுரவம்'' (அபிமானி, எதிராக ப.9)

என தலித் மக்களின் முன்னேற்றம் குறித்து பெருமிதமாகப் பேசுகிறது அபிமானியின் கவிதை. தற்போதைய மாற்றம் தலித் மக்களைப் பெருமிதம் கொள்ள வைத்துள்ளது.

**முடிவுரை**

தலித்திய படைப்புகள் என்றாலே அழுகை, சோகம், அழுக்கு என்ற பொதுவான எண்ணம் உருவாகியுள்ள சூழலில் தலித்திய படைப்புகள் தலித் மக்களின் உணர்வுகள் குறித்துப் பேசும் போது மகிழ்ச்சி, பெருமிதம், தன்னம்பிக்கை போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையை அறியலாம். தலித்திய கவிஞர்கள் அன்று முதல் இன்று வரை தம்முடைய கவிதைகள் மூலம் தாழ்த்தப்பட்டோரது வாழ்வியலையும் வரலாற்றையும் எடுத்துக் கூறி அம்மக்களது உணர்வுகளைத் தூண்டி தன்னம்பிக்கையோடு மனித விடுதலைக்குப் போராட வித்திட்டு வருகின்றனர் என்ற உண்மை நிலை விளங்குகிறது.